بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *01/05/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜும்முஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டரான ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்விலிருந்து, உண்மையை எத்தகைய விலைகொடுத்தும் கடைப்பிடித்தது குறித்தும் இது தொடர்பாக எதிரிகளுக்குச் சவால் விடுத்தது குறித்தும் ஈமானுக்கு வலுவூட்டும் சம்பவங்களின் தொகுப்பு**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔
بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டரான ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து, உண்மையை எத்தகைய விலைகொடுத்தும் கடைப்பிடிப்பது குறித்தும் இது தொடர்பாக எதிரிகளுக்கே சவால் விடுத்தது குறித்தும் சில சம்பவங்களை இன்று நான் எடுத்துரைப்பேன். இந்தச் சம்பவங்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உண்மையின் மீது கொண்டிருந்த அசாதாரணமான பற்று, கருத்துக்களை வெளிப்படுத்துவதில் (அன்னாருக்கு) இருந்த துணிச்சல் மற்றும் எதிரிகளை வெளிப்படையாகக் களம் காண அழைக்கும் (அன்னாரது) அறைகூவல் ஆகியவற்றிற்கு மிகச்சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறது.

மவ்லவி முஹம்மது ஹுசைன் படால்வி அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது குஃப்ர் மற்றும் பொய் போன்ற கடுமையான அவதூறுகளைச் சுமத்தியபோது, அன்னார் தன்னை தற்காத்துக் கொள்வதோடு மட்டும் நின்றுவிடாமல், முழு நம்பிக்கையுடனும் கண்ணியத்துடனும் ஒரு தீர்மானமிக்க சவாலை முன்வைத்தார்கள். **அன்னார் மிகத் தெளிவான சொற்களில் இவ்வாறு கூறினார்கள்**: "எனது முழு வாழ்க்கையுமே சாட்சியாக உள்ளது; நான் ஒருபோதும் பொய்யைக் கையாண்டதில்லை. சாதாரணச் சூழலிலும் சரி, உயிர் கண்ணியம் மற்றும் உடைமைகளைக் காப்பாற்றிக் கொள்ளப் பொய் சொல்வதே எளிதான வழி என்று கருதப்பட்ட இக்கட்டான தருணங்களிலும் சரி, நான் பொய்யை நாடியதில்லை."

நீதிமன்றங்களில் வழக்குகள் நடந்தபோது, வெற்றி பெறுவதற்குப் பொய் சொல்வது அவசியம் என்று வழக்கறிஞர்கள் வெளிப்படையாகக் கூறியபோதும், தாம் உண்மைக்கே முன்னுரிமை அளித்ததாகவும் அதன் காரணமாக நஷ்டங்களைப் பொறுத்துக் கொண்ட போதிலும் உண்மையை ஒருபோதும் கைவிடவில்லை என்றும் அன்னார் கூறினார்கள். அதற்குப் பிறகு, **அன்னார் மிகுந்த ஆற்றல்மிக்க தொனியில் தமது எதிரியை விளித்து இவ்வாறு கூறினார்கள்**: "நீங்கள் உமது வாதத்தில் உண்மையாளராக இருந்தால், வெறும் அவதூறுகளைச் சுமத்துவதோடு மட்டும் நின்றுவிடாமல், அதற்கான உறுதியான, தெளிவான ஆதாரத்தை எடுத்து வையுங்கள். ஏனெனில், இறை அச்சம் கொண்ட ஓர் உண்மையாளர், எவ்வித முழுமையான

ஆய்வும் இன்றி ஒருபோதும் மற்றவர் மீது குஃப்ர் மற்றும் பாவம் போன்ற அவதூறைச் சுமத்த மாட்டார்."

இது வெறும் தற்காப்புக்காகச் சொல்லப்பட்ட பதில் அல்ல; மாறாக, எதிரியையே குற்றவாளி கூண்டில் நிறுத்தும் வகையிலான ஓர் உயர்ந்த ஒழுக்க, ஆன்மிக அளவுகோலை நிலைநாட்டுவதாகும். பின்னர் **அன்னார் இந்த விவாதத்தை மற்றொரு உயர்நிலைக்குக் கொண்டு செல்லும் விதமாக ஒரு தீர்மானமிக்க, அசாதாரணமான சவாலை விடுத்தார்கள்**: "வாருங்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் திருக்குர்ஆனும் உண்மையின் அடையாளமாக எதனை குறிப்பிட்டுள்ளதோ அந்த ஆன்மிக உண்மைத் தன்மையின் (அதாவது, உண்மையான கனவுகள் மற்றும் இல்ஹாம்களின்) அடிப்படையில் நம்மில் யார் உண்மையாளர் என்பதைச் சோதித்துப் பார்ப்போம்."

ஒரு சபையை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், அதில் இரு தரப்பினரும் தத்தமது சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், யாருடைய உண்மைத்தன்மை வெளிப்படுகிறதோ அவரே உண்மையாளர் என்றும், மற்றவரை அதே இடத்தில் கஸ்ஸாப் (பெரும் பொய்யர்), தஜ்ஜால் மற்றும் பொய்யர் என்று தீர்மானித்துவிடலாம் என்றும் அன்னார் பகிரங்கமாக அறிவித்தார்கள்.

இந்த இடத்தில் அன்னாரது துணிச்சல் அதன் உச்ச நிலையை அடைந்திருப்பதை காண முடிகிறது. **அன்னார் கூறினார்கள்**: "இந்தச் சோதனையில் நான் பொய்யன் என்று நிரூபிக்கப்பட்டால், என் மீது சுமத்தப்பட்ட குஃப்ர், தஜ்ஜால், மோசடி போன்ற அனைத்து அவதூறுகளையும் நானே ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அல்லாஹ் எனது உண்மைத்தன்மையை வெளிப்படுத்திவிட்டால், அப்போது அதே அவதூறுகளை உங்கள் மீது ஏற்றுக் கொள்ளும் தைரியம் உங்களுக்கு இருக்கிறதா?"

இவை வெறும் வார்த்தைகள் அல்ல; மாறாக, உண்மையின் மீது தமக்கு இருந்த முழுமையான நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் ஒரு பகிரங்கமான, பாரபட்சமற்ற, தெளிவான சவாலாகும்.

இறுதியாக, **அன்னார் மிகுந்த நம்பிக்கையுடனும் கம்பீரத்துடனும் இவ்வாறு அறிவித்தார்கள்**: "அல்லாஹ்வே இதற்குத் தீர்ப்பு வழங்குவான்; அவதூறு கற்பிப்பவர் ஒவ்வொருவரின் உண்மை நிலையும் வெளிப்படும் காலம் நெருங்கிவிட்டது. பிறரை இழிவுபடுத்துவதற்காக எழுகின்றவர்கள், தாங்களே இழிவுக்கு அடையாளமாக மாறிப்போவார்கள். தாங்கள் உண்மையைத் தேடுபவராக மாறி எனது வாழ்க்கை வரலாற்றின் மீது ஒரு பார்வை செலுத்தினால், இறைவன் என்னை எப்போதும் பொய்யின் அசுத்தத்திலிருந்து பாதுகாத்தே வந்திருக்கிறான் என்பது உறுதியான சான்றுகள் மூலம் தங்களுக்குத் தெளிவாகும். சில நேரங்களில் ஆங்கிலேய நீதிமன்றங்களில் எனது உயிருக்கும் கண்ணியத்திற்கும் எத்தகைய ஆபத்துகள் ஏற்பட்டன என்றால், பொய் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று அனைத்து வழக்கறிஞர்களும் எனக்கு ஆலோசனை கூறினார்கள். ஆனால், அல்லாஹ் வழங்கிய நல்வாய்ப்பால், உண்மைக்காக எனது உயிர் மற்றும் கண்ணியத்தைத் தியாகம் செய்ய நான் துணிந்துவிட்டேன். பலமுறை சொத்து தொடர்பான வழக்குகளில் உண்மைக்காகப் பெரும் நஷ்டங்களை நான் சுமந்திருக்கிறேன். பல சந்தர்ப்பங்களில் அல்லாஹ்வின் மீதான அச்சத்தின் காரணமாக, எனது தந்தை மற்றும் சகோதரருக்கு எதிராகவும் நான் சாட்சியம் அளித்துள்ளேன்; ஆனால் உண்மையை ஒருபோதும் கைவிடவில்லை. எனது நாவிலிருந்து எப்போதாவது பொய் வெளிப்பட்டதாக எவரால் நிரூபிக்க முடியும்? ஆரம்பத்திலிருந்தே நான் அல்லாஹ்வுக்காக மனிதர்களிடம் பொய் சொல்வதைக்

கைவிட்டிருக்கும்போது, பலமுறை எனது உயிர் மற்றும் சொத்துக்களை உண்மைக்காகத் தியாகம் செய்திருக்கும்போது, பிறகு நான் ஏன் இறைவனின் மீது பொய் சொல்லப் போகிறேன்?"

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "உண்மையாளர்களைச் சோதிப்பதற்கான மற்றொரு வழியும் உண்டு. அது என்னவென்றால், சில நேரங்களில் மனிதன் எத்தகையதொரு சோதனையில் சிக்கிக் கொள்கிறான் என்றால், அந்த நேரத்தில் பொய் சொல்வதைத் தவிரத் தப்பிப்பதற்கோ வேறு எந்த வழியும் அவனுக்குத் தெரிவதில்லை. அப்போதுதான் அவனது இயல்பில் உண்மை இருக்கிறதா அல்லது பொய் இருக்கிறதா என்பது சோதிக்கப்படுகிறது."

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது வாழ்க்கையிலிருந்து மூன்று உதாரணங்களை முன்வைத்தார்கள்:

1. மிர்ஸா ஆஸம் பேஃக் லாகூரி என்பவரின் முயற்சியால் தொடரப்பட்ட நில உரிமை தொடர்பான வழக்கு.
2. தபால் துறை தொடர்பான வழக்கு.
3. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் மகன் ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப் அவர்கள் ஓர் இந்து நபர் மீது தொடர்ந்த வழக்கு. அந்த நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் குடும்ப நிலத்தில் ஒரு வீட்டைக் கட்டிவிட்டதால், அதனை இடிக்க வேண்டும் என்று கோரி அந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது. ஆனால், அந்த வழக்கை ஆயத்தம் செய்த முறையில் உண்மைக்கு மாறான ஒரு விஷயம் இடம் பெற்றிருந்தது. எனவே, எதிர்த்தரப்பினர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களைச் சாட்சியாகச் சேர்த்தனர்; மிர்ஸா சாஹிப் என்ன சாட்சியம் அளிக்கிறாரோ அதனை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று அவர்கள் கூறினர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "உண்மையைப் பேண வேண்டும் என்பதற்காக மட்டுமே அந்த வழக்கை நானே எனது கைகளால் தோல்வியடையச் செய்தேன். உண்மையை பேசுவதற்கு முன்னுரிமை வழங்கி நிதி இழப்பைப் பொருட்படுத்தாது அதனை ஏற்றுக் கொண்டேன். இப்போது ஹஸ்ரத் ஷேக் சாஹிப் அவர்களே!"

**அதாவது, மவ்லவி படால்வி சாஹிபை விளித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

"தங்களது உயிர், கௌரவம் மற்றும் பொருள் ஆகியவை உண்மையைச் சொல்வதினால் அழிந்துவிடும் என்று தெரிந்தும், நீங்கள் உண்மையை விடாமல், உயிர் மற்றும் செல்வத்தைப் பொருட்படுத்தாமல் இருந்ததற்கு தங்களிடமும் இத்தகையதொரு கடுமையான சோதனைக்கால முன்மாதிரி ஏதேனும் இருந்தால், அந்தச் சம்பவத்தை அதன் முழுமையான ஆதாரங்களுடன் அல்லாஹ்வுக்காக எடுத்து வையுங்கள்! இல்லையெனில், இந்தக் காலத்து பெரும்பாலான முல்லாக்கள் மற்றும் மவ்லவிகளின் பேச்சுகள் வெறும் வாய்வார்த்தைகளே என்பதுதான் எனது நம்பிக்கை. இவர்கள் ஒரு பைசாவிற்காகக்கூடத் தமது ஈமானை விற்கத் தயாராக உள்ளனர். ஏனெனில், நமது நபி (ஸல்) அவர்கள் இறுதி காலத்து மவ்லவிகளைப் படைப்பினங்களிலேயே மிக மோசமானவர்கள் என்று கூறியுள்ளார்கள். மேலும், தங்களுடைய முஜத்தித் நவாப் சித்தீக் ஹசன் கான் மர்ஹூம் அவர்கள் தமது ஹுஜஜுல் கராமா நூலில், அந்த இறுதி காலம் இதுதான் என்று ஒப்புக்கொண்டுள்ளார்கள். எனவே, இத்தகைய மவ்லவிகளின் தூய்மையையும் இறையச்சத்தையும் ஆதாரமின்றி ஏற்றுக்கொள்வது என்பது ஹஸ்ரத்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றை மறுப்பதாகும். எனவே, தாங்கள் ஓர் உதாரணத்தை எடுத்து வையுங்கள்! அவ்வாறு எடுத்து வைக்கத் தவறினால், தங்களிடம் உண்மை பேசுவதற்கான வாதம் மட்டுமே உள்ளது என்பதும், சோதனையின்றி எவ்வித வாதமும் ஏற்புடையதல்ல என்பதும் நிரூபணமாகும். தங்களுடைய அக நிலையை அல்லாஹ் அறிவான்; தாங்கள் எப்போதாவது பொய் மற்றும் அவதூறு என்ற அசுத்தத்தில் சிக்கினீரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அல்லாஹ்வுக்கே தெரியும். மறைவானவற்றை அவன் மட்டுமே அறிவான்; அல்லது தங்களைப் பற்றி நன்கு அறிந்தவர்களுக்கு அது தெரியும். சோதனையின் போது யார் உண்மையாளராக வெளிப்பட்டு, உண்மையைக் கைவிடாமல் இருக்கிறாரோ, அவரது உண்மைத் தன்மையின் மீது முத்திரை பதிக்கப்படுகிறது. அத்தகைய முத்திரை தங்களிடம் இருந்தால் அதனை எடுத்து வையுங்கள். இல்லையெனில், அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவன் தங்கள் இரகசியங்களை வெளிப்படுத்தி விடாமல் இருக்கட்டும்."

எதிர்த்தரப்பினர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களைச் சாட்சியளிக்க வருமாறு கோரியிருப்பதை அறிந்த ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப் அவர்கள், ஹுஸூர் (அலை) அவர்கள் ஒருபோதும் பொய் பேச மாட்டார்கள் என்பதை அறிந்திருந்த காரணத்தால் அந்த வழக்கையே திரும்பப் பெற்றுக்கொண்டார்கள்.

அந்த வீடு 'டெபுடி ஷங்கர்தாஸின் மாளிகை' என்று அழைக்கப்பட்டது. அவர் மிகவும் மார்க்க துவேஷம் கொண்டவராகவும், கடும் எதிர்ப்பாளராகவும் இருந்தார். அந்த வீட்டினால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய வீட்டின் மறைவுத் தன்மைக்கும் பாதிப்பு ஏற்பட்டது. மேலும், அந்த நபர் தொழுகைக்காகப் பள்ளிவாசலுக்கு வருபவர்களை ஏசிப் பேசி வந்தார். தொழுகையாளர்கள் இது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் முறையிடும்போது, அன்னார், "பொறுமை காப்பீர்களாக! இறைவனின் முகாமுக்கு முன்னால் எவரும் நிலைக்க முடியாது" என்று கூறுவார்கள்.

இவ்வாறான நிலையில் டெபுடியின் அந்த மகிழ்ச்சியான வீடு பாழடையத் தொடங்கியது; இறுதியில் அவர் நோயுற்றோ அல்லது வேறு ஏதோ ஒரு காரணத்தினாலோ அங்கிருந்து வெளியேறினார். அந்த வீட்டை ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி இர்பானி சாஹிப் (ரலி) அவர்கள் விலைக்கு வாங்கினார்கள். பின்னர் 1932-ல் அங்கு சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் அலுவலகங்கள் நிறுவப்பட்டன; அதனை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் திறந்து வைத்தார்கள். இறைவனின் வல்லமை எத்தகையது என்றால், அன்று எந்த நபர் மமதையுடன் பள்ளிவாசலுக்கு வருபவர்களைத் தடுத்தாரோ, இன்று இறை நியதி அவருடைய வீட்டையும் அந்தப் பகுதி முழுவதையும் பள்ளிவாசலாக ஆக்கிவிட்டது. அந்த வீடு இப்போது அக்ஸா பள்ளிவாசலின் ஒரு பகுதியாகத் திகழ்கிறது.

**இதேபோன்ற பல்வேறு வழக்குகளைப் பற்றிக் குறிப்பிடும்போது ஹஸ்ரத் ஷேக் நூர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "எனது தந்தையும், பெரிய தந்தையும் அடிக்கடி கூறுவார்கள்; எங்களது கிராமம் மிர்ஸா சாஹிப் அவர்களின் நிலப்பகுதிக்கு உட்பட்டிருந்தது. சில காலம் ஹுஸூர் (அலை) அவர்கள் தமது தந்தையின் பிரதிநிதியாக இருந்தார்கள். எங்களுடனும் சிலமுறை நீதிமன்றத் தவணைகளுக்காக அன்னார் வந்திருக்கிறார்கள். வழக்கிற்கு எத்தகைய பாதிப்பு ஏற்பட்டாலும் சரி, அன்னார் எப்போதும் உண்மையின் பக்கமே நிற்பார்கள்; ஒருபோதும் பொய் சொல்ல மாட்டார்கள்."

**ஹஸ்ரத் மியான் அல்லாஹ் யார் اللہ یار சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: “ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களுக்கு 25 அல்லது 30 வயது இருக்கும்போது, அன்னாருடைய தந்தைக்கும் நிலத்தில் இருந்த சில குத்தகைதாரர்களுக்கும் இடையே மரம் வெட்டியது தொடர்பாக ஒரு தகராறு ஏற்பட்டது. நிலத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் மரங்களும் தமக்கே சொந்தம் என்பது அன்னாருடைய தந்தையின் கருத்தாக இருந்தது. எனவே, வழக்கினை நடத்துவதற்காக ஹுஸூர் (அலை) அவர்கள் குர்தாஸ்பூர் சென்றார்கள். அன்னாருடன் இரண்டு சாட்சிகளும் சென்றனர். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் வழியில் சாட்சிகளிடம், 'தந்தையாரோ வீணாக வற்புறுத்துகிறார்கள்; மரங்களும் பயிர்களைப் போன்றதுதானே. அந்த ஏழை மக்கள் அதனை வெட்டி(ப் பயன்படுத்தி)னால் என்ன நஷ்டம் ஏற்பட்டுவிடப் போகிறது? எதுவாக இருந்தாலும் நீதிமன்றத்தில் அந்த மரங்கள் முழுவதுமே எங்களுக்கே சொந்தம் என்று என்னால் கூற முடியாது; வேண்டுமானால் அதில் எங்களுக்கு ஒரு பங்கு உண்டு என்று கூறலாம்' என்றார்கள்.”

அந்தக் குத்தகைதாரர்களுக்கும் அன்னார் மீது அளவற்ற நம்பிக்கை இருந்தது. எனவே நீதிபதி இது குறித்துக் கேட்டபோது அவர்கள் எவ்விதத் தயக்கமுமின்றி, மிர்ஸா சாஹிப்பிடமே கேட்டு தெரிந்து கொள்ளுங்கள் என்று பதிலளித்தனர். ஹுஸூர் (அலை) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, 'எனது கருத்தின்படி மரங்கள் பயிர்களைப் போன்றது; பயிரில் எங்களுக்கு எவ்வாறு பங்கு உண்டோ, அதேபோல் மரங்களிலும் பங்கு உண்டு' என்று பதிலளித்தார்கள். அன்னாருடைய இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நீதிபதி குத்தகைதாரர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வாழ்க்கையிலிருந்து உண்மைத்தன்மை தொடர்பாக சில சம்பவங்களை நான் எடுத்துரைத்துள்ளேன். அன்னார் எப்போதும் உண்மைக்கே முன்னுரிமை அளித்தார்கள்; பொய்க்கு அருகில் கூட செல்லவில்லை. அன்னார் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கும், எப்போதும் உண்மையின் மீது நிலைத்திருக்குமாறு அறிவுறுத்தினார்கள். எந்த அளவுக்கென்றால், பைஅத் நிபந்தனைகளிலும், பொய்யை வெறுப்போம் என்றும் உண்மையின் மீது நிலைத்திருப்போம் என்றும் எழுதப்பட்டுள்ளது. எனவே, உண்மையை நமது சிறப்பம்சமாக ஆக்கிக்கொள்வது நமது கடமையாகும். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)